

பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் பணம் எடுக்கும் அட்டைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.கற்பகம்,பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், நகர்மன்றத் தலைவர் அம்பிகா ராஜேந்திரன், ந.கிருஷ்ணமூர்த்தி(ஆலத்துார்), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), மீனா அண்ணாத்துரை(பெரம்பலூர்), முத்தமிழ்ச்செல்வி மதியழகன், பேரூராட்சி தலைவர்கள் ஜாகீர்உசேன் (லெப்பைக்குடிக்காடு), சங்கீதா ரமேஷ் (குரும்பலூர்), பாக்கியலட்சுமி (பூலாம்பாடி), இர.வள்ளியம்மை(அரும்பாவூர்), தழுதாழை பாஸ்கர், மரு.கருணாநிதி, நகர்மன்றத் துணைத் தலைவர் து.ஹரிபாஸ்கர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் பெருந்துறை சிப்காட் வளாகத்திலிருந்து வெளியேறும் கழிவுகளால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான கருத்துக்களுக்கான கூட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அ.கணேசமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் சந்தோஷினி சந்திரா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.மனீஷ், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எஸ்.ஆர்.எஸ். செல்வம், சென்னிமலை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் காயத்ரி இளங்கோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில்

# பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட அட்டைகள்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் வழங்கினார்!

பெரம்பலூர்,செப்,19

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.09.2023 அன்று காஞ்சிபுரத்தில் தொடங்கிவைத்ததையடுத்து, பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் 2,000 பயனாளிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் பணம் எடுக்கும் அட்டைகளை வழங்கினார்.

தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் .க.கற்பகம், தலைமை வகித்தார். பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சியாமளா தேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

“மங்கயராய் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா“ என்றார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள். அவர் இன்று இருந்திருந்தால் “மங்கையராய் தமிழ் நாட்டில் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா” என்றே சொல்யிருப்பார். அந்த அளவிற்கு பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு சுயதொழில் தொடங்க சுழல்நிதி, 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டம், மகளிர் வாழ்வில் விடியலை ஏற்படுத்தும் இலவச பேருந்து வசதி திட்டம் என பெண்களுக்கான செயல்படுத்தப்பட்ட அரசின் திட்டங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல், குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ,1000 உரிமைத்தொகை வழங்கிடும் “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை” தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 6 லட்டம் மகளிர் பயன்படக்கூடிய வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில், இத்திட்டத்திற்கென ஒவ்வொரு நியாய விலை அங்காடியையும் ஒரு அலகாக கொண்டு மொத்தம் உள்ள 282 நியாய விலை அங்காடிகளில் முதல் மற்றும் இரண்டாம் கட்டமாக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. மேலும் விடுபட்ட மற்றும் குறித்த நாளில் முகாமிற்கு வர இயலாத பயனாளிகள் இத்திட்டத்தில் விண்ணப்பிப்பதற்காக சிறப்பு கட்ட முகாம்கள் நடத்தப்பட்டு பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

முதற்கட்ட முகாமில் 77,861 விண்ணப்பங்களும், இரண்டாம் கட்ட முகாமில் 79,869 விண்ணப்பங்களும், என மொத்தம் 1,63,150 விண்ணப்பங்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டது. பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட 1,63,150 விண்ணப்பங்களில் 62,476 விண்ணப்பங்கள் கள ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. வங்கி கணக்கு இல்லாத மற்றும் வங்கி கணக்கு செயலில் இல்லாத 2,715 பயனாளிகளுக்கு சிறப்பு முகாம்கள் மூலம் புதியதாக வங்கி கணக்கு துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் கூடுதல் விவரங்கள் தேவைப்படுவோருக்கும். விண்ணப்பங்கள் நிராகரிப்பு தகவல்கள் வழங்குவதற்கும் மற்றும் வங்கிகள் தொடர்பான குறைகளை களைவதற்கும் மாவட்டம், கோட்டம் மற்றும் வட்டங்களில் உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு பொறுப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் இ.சேவை மையங்கள் மேல்முறையீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு விண்ணப்பங்கள் மீது 30 நாட்களுக்குள் தீர்வு காண அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்திற்கு முதற்கட்டமாக வங்கிகள் மூலம் 7,823 பணம் எடுக்கும் அட்டைகள் (ATM CARD ) வரப்பெற்றுள்ளது. இதில் போக்குவரத்துத்துறை அமைச்சர் 2,000 பயனாளிகளுக்கு பணம் எடுக்கும் அட்டைகளை வழங்கினார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் மேலும் ஒரு சிறப்பு ஏற்பாடாக, விழா நடைபெற்ற அரங்கிற்கு அருகிலேயே இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சார்பில் நடமாடும் ATM வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த வாகனத்தில் பயனாளிகள் தங்களின் ஏ,டி.எம் கார்டு மூலம் பணம் எடுத்து மகிழ்ந்ததை போக்குவரத்துத்துறை அமைச்சர் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ. லலிதா, வருவாய் கோட்டாட்சியர் ச.நிறைமதி, தனலட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்களின் செயலர் நீல்ராஜ், நகர்மன்றத் தலைவர் அம்பிகா ராஜேந்திரன், ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள் ந.கிருஷ்ணமூர்த்தி(ஆலத்துார்), பிரபா செல்லப்பிள்ளை (வேப்பூர்), மீனா அண்ணாத்துரை(பெரம்பலூர்), மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் முத்தமிழ்ச்செல்வி மதியழகன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் பாரத்குமார், பேரூராட்சி தலைவர்கள் ஜாகீர்உசேன் (லெப்பைக்குடிக்காடு),

சங்கீதா ரமேஷ் (குரும்பலூர்), பாக்கியலட்சுமி (பூலாம்பாடி), இர.வள்ளியம்மை(அரும்பாவூர்), மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், மரு.கருணாநிதி, நகர்மன்றத் துணைத்தலைவர் து.ஹரிபாஸ்கர், அனைத்து முதல்நிலை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தொடங்கி வைத்து நிறுவனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வேலை நியமன ஆணையை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான வேதா எம்.முருகன், சட்ட மன்ற உறுப்பினர்கள் சீர்காழி எம்.பன்னீர்செல்வம், எஸ்.ராஜ்குமார், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி, சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீவலன் மற்றும் பலர் உள்ளனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பஞ்சப்பள்ளியில் தந்தைபெரியார் அவர்களின் 145வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினார்.உடன் மாவட்ட துணை செயலாளர்கள் ஆ.மணி,ராஜகுமாரி,ஒன்றிய செயலாளர்கள் பி.கே.அன்பழகன்,முனியப்பன், அடிலம்.அன்பழகன்,மாவட்டநெசவாளர்அணிஅமைப்பாளர்ராஜபார்ட்ரங்கதுரை,விவசாயஅணி துணை அமைப்பாளர் ஏ.வி.குமார்,முன்னாள் எம்.எல்.ஏ.ஜி.எல்.வெங்கடாச்சலம்,மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்



கோவை வடக்கு மாட்டம், கவுண்டம்பாளையம் பகுதிக் கழகம், 35–வது வட்டக் கழகம், அண்ணா நகரில் காவல் நிலையத்திற்கு அருகில் கழக முப்பெரும் விழாவையொட்டி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது திருவுருவப் படத்திற்கு வட்ட அவைத் தலைவர் கோ.துரைபாண்டியன் ஏற்பாட்டில் மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் திருமதி மாலதி தலைமையில் கா.பொன்னரசு ஒருங்கிணைப்பில் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இதில் பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## கரூர் மாவட்டத்தில் – மகளிர்க்கு மாதம் ரூ.1000 வழங்கும்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தொடக்கம்!

## ஜோதிமணி எம்.பி.– எம்.எல்.ஏ.க்கள் – மேயர் பங்கேற்பு!

கரூர், செப்.19-

மகளிர்க்கு மாதம் 1000ரூபாய் வழங்கும் கலைஞர் மகளிர் உரிமை திட்டம் கரூர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர் கரூர் அட்லஸ் கலையரங்கத்தில் (15.08.2023)அன்று நடைபெற்ற விழா நிகழ்வில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கினார்.

கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை). ஆர்.. இளங்கோ (அரவக்குறிச்சி), .க.சிவகாமசுந்தரி(கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி மேயர்.க.கவிதா, துணை மேயர் ப.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் பயனாளிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Card) வழங்கி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கையில்,

முன்னாள் முதல்வர் அண்ணா அவர்களுடைய பிறந்தநாளில் நாட்டிலேயே முன்னோடி திட்டமாக கலைஞர் மகளிர் உரிமை திட்டம் திட்டத்தை தொடங்கி வைத்து முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக இந்த திட்டத்தின் நோக்கத்தை கூறியிருக்கிறார்கள். அதனை ஒரு தொகையாக வழங்காமல் மகளிருக்கான உரிமையாக அங்கீகரித்து வழங்கக்கூடிய இந்த திட்டம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க திட்டமாகும்.

இந்த முன்னோடி திட்டத்தை சிந்தித்து செயல்படுத்தி இருக்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நாம் கண்டிப்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்ள வேண்டும். இந்த திட்டம் கடந்த இரண்டு மூன்று மாதங்களாகவே இதற்காக அதிகமாக திட்டமிட்டு பொது மக்களுக்கு எந்த வித சிரமமும் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நம்முடைய மாநிலம் முழுவதும் முதலமைச்சர் அவர்கள் மற்றும் தலைமை செயலாளர் வழிகாட்டுதலின்படி நாங்கள் அதை செய்தோம்.

நம்முடைய மாவட்டத்தில் குறிப்பாக நம்முடைய அரசு அலுவலர்கள் அனைவருக்கும் உங்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாதம் பணம் உங்களுக்கு உங்களுடைய வங்கி கணக்கில் நேரடியாக வந்து விடும். ஆகையால் யாராவது ஏ.டி.எம். கார்டுகளை எண்கள் குறித்து கேட்டால் தகவல் அளிக்காதீர்கள். இது தொடர்பாக வங்கி அலுவலர்கள் தொடர்பு கொள்ள மாட்டார்கள். வங்கியில் இருந்து பெறப்பட்ட ஏ. டி எம் கார்டுகளை நீங்கள் கவனத்துடன் கையாள வேண்டும். அதேபோல உங்களுக்கு எந்த சந்தேகங்கள் இருந்தாலும் ஏதாவது ஒரு குறையோ இருந்தால் நீங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் இந்த அனைத்து அலுவலகங்களில் உங்களுக்காக உதவி மையம் அமைத்துள்ளோம். உங்களுடைய சந்தேகங்களை எப்பொழுது வேண்டுமானாலும் கேட்டுக் கொள்ளலாம். தொலைபேசி எண் ஒவ்வொரு உதவி மையத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த எண்களில் தொடர்பு கொண்டு உங்களுடைய சந்தேகங்களுக்கு தீர்வு காணலாம் . மற்றபடி இந்த தொகை மாதம், மாதம் உங்களுடைய வங்கிக் கணக்கில் வந்து சேரும். நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய வங்கி கணக்கில் ஆதார் என்னுடன் இணைக்கப்பட்ட வங்கி கணக்கில் செலுத்தப்படும் தொடர்ந்து கண்காணித்து அந்த பணத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் கந்தராஜ், மகளிர் திட்ட இயக்குநர் சீனிவாசன், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் தேன்மொழி, மண்டலத் தலைவர்கள் சக்திவேல், கனகராஜ். முதன்மை மண்டல மேலாளர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வி.டி.பாணி, மாவட்ட அஞ்சல் கண்காணிப்பாளர் ராஜ்குமாரி. தனித்துணை ஆட்சியர் சைபுதீன், வருவாய் கோட்டாட்சியர்கள் .ரூபினா (கரூர்), கருணாகரன் (குளித்தலை), மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## சோ.துரைபாண்டியன் நிகழ்ச்சி ஏற்பாடு! கா.பொன்னரசு ஒருங்கிணைப்பில்

# கோவை வடக்கு - அண்ணா நகரில் கழக முப்பெரும் விழா!

## மாலதி தலைமையில் கழகத்தினர் கொண்டாட்டம்!

சென்னை, செப்.18

தலைமைக் கழகம் அறிவித்துள்ளபடி கழக உடன்பிறப்புகளுடன், பொது மக்களை ஒருங்கிணைத்து பவள விழா மற்றும் முப்பெரும் விழாவானது, நெஞ்சுரம் வாய்ந்த,புலமையின் சிகரமான, நமது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கட்சி தோன்ற முழுமுதற் காரண கர்த்தாக்களில் ஒருவரான பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் (15.9.2023), மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க,, சனாதனத்தை எதிர்த்து வீறு கொண்டு குரல் கொடுத்து, இந்திய நாட்டையே நம் கட்சியின் பக்கம் திருப்பிய இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளடக்கிய,, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமூகநீதியை தொடர்ந்து காத்திடும் நமது திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள் (17.9.2023) மற்றும் சீர்திருத்த செம்மல், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் பிறந்த தினம் (17.9.2023) ஆகிய மூன்றையும் ஒருங்கிணைத்து, நேற்று (17-ஆம் தேதி) காலையில் நமது கட்சியினர் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து, இனிப்புகள் வழங்கி தெரு நெடுகிலும் வெடிகள் வெடித்து, அறிஞர் அண்ணா, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் ஆகியோரது திருஉருவப் படத்திற்கு மலர்களால் அலங்கரித்து மாலை அணிவித்து மரியாதை செய்து கோலாகலமாக கோவையே குலுங்கும் வண்ணம் விழாக்கோலம் பூண்டது.

கோவை வடக்கு மாவட்டம் உள்ளடக்கிய அறிஞர் அண்ணா நகர் காவல் நிலையத்திற்கு அருகில் நடைபெற்ற இந்த நிகழ்வானது, அவைத் தலைவர் சோ. துரைப்பாண்டியன் ஏற்பாட்டில் , மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் திருமதி மாலதி தலைமையில், மூத்த முன்னோடியும், முன்னாள் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் துணை அமைப்பாளர்

கா.பொன்னரசு ஒருங்கிணைப்பில் , மூத்த முன்னோடியும் 34-வது வட்டக் கழக அவைத் தலைவருமான நாகராஜ், 35-வது வார்டின் மாமன்ற உறுப்பினர் சம்பத், மூத்த முன்னோடியும் 35-வது வட்டக் கழக துணைச் செயலாளர் குணசீலன், கவுண்டம்பாளையம் பகுதிக்கழக துணைச் செயலாளர் திருமதி கண்ணகி, முன்னாள் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி ஆல்ஸ் பிரசன்னா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டச் செயலாளர் தாமோதரன், முன்னாள் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி உமா ஆகியோர் முன்னிலை வகிக்க கொண்டாடப்பட்டது.

இதில் தலைமை வன பாதுகாவலர் பி. வரதராஜ், இலக்கிய அணி ரவி முரசு , விளையாட்டு மேம்பாட்டு அணி மோகன் குமார், கோவில் கமிட்டியை சார்ந்த சந்திரலிங்கம், திருமதி சரஸ்வதி தேவி, வழக்கறிஞர் அணி சுப்பிர மணியன், இளைஞர் அணி விக்னேஷ், மூத்த முன்னோடிகள் ரங்கா வீதி அரங்கசாமி, பி.ஜி.ராமதாஸ்,

முன்னாள் காவல் உதவி ஆய்வாளர் மதிவாணன், அரிமா சங்க செயலாளர் குமரேசன், கோவை லேப் சிவக்குமார், லட்சுமி நகர் விநாயகர் கோவில் கமிட்டி நிர்வாகிகள் பாலன், கஜேந்திரன், கிஷோர் குமார், வர்த்தக அணி ராம் குமார், ஆட்டோ நகர் வீரப்பன், அன்பு நகர் சக்திவேல், ஜான் கழக முன்னோடிகள் சலூன் பாலன், இ சர்வீஸ் மோகன்ராஜ், ரியல் எஸ்டேட் ராதாகிருஷ்ணன், காய்கறி கடை பஞ்சு, சலாமத் பாட்சா, கவின்ராஜ், தீபக் குமார், லாண்டரி செந்தில், நந்தினி, கோயில் மிதுன், புனிதா கார்டன் பாலாஜி, பாத்திரக்கடை ராஜ பாண்டியன், முன்னாள் நலச் சங்கத் தலைவர் திருமண் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் தளபதி மு.க. ஸ்டாலின் அறிவாலயத்தில் கெங்கவல்லி பேரூர் செயலாளர் சு.பாலமுருகன் ஏற்பாட்டில் கிழக்கு மாவட்ட பா.ஜ.க. மகளிர் அணி பொருளாளர் சுமதி தலைமையில் 100க்கும் மேற்பட்ட பெண்கள் அக்கட்சியில் இருந்து விலகி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர், நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் முரா .கருணாநிதி, மாவட்ட துணைச் செயலாளர் சின்னதுரை , மாவட்ட தி.மு.க. நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ.ஆறுமுகம் மற்றும் மாவட்ட, பேரூர் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.